**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண். 466 /2021**

**தேதி : 03.11.2023**

**(வா.சா.–2) – திரு.முத்துக்குமார்**

**சாட்சி அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : (பிரதிவாதி தரப்பில்)**

நான் தெற்குரதவீதி கதவு எண்.19 ல் வசித்து வருகிறேன். வழக்குச் சொத்தில் நான் எப்போதும் குடியிருக்கவில்லை என்றால் நான் குடியிருக்கவில்லை, என் தம்பி குடியிருக்கிறார். வழக்குச் சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து எந்த வருடம் எங்களுக்கு கிடைத்தது என்றால் 1981 ஆம் வருடம் எங்களுக்குப் பாத்தியமானது. பிரதிவாதி எப்போது கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து கடந்த நான்கு வருடங்களாக செல்வம் என்பவருக்கு உள்வாடகைக்கு விட்டுள்ளாரா என்றால் இல்லை. என்னுடைய சொத்துக்கு முன்பகுதி வாசலில் கிழக்கு மற்றும் வடக்கில் பிரதிவாதி வீடு என்றால் சரிதான். எனது வீடும், பிரதிவாதி வீடும் ஆதியில் ஒருவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. முன்பு அந்த சொத்தின் சதுரடி 1305 என்றும், அதில் வடபுற சொத்தை நாங்கள் வாங்கினோம் என்றாலும், தென்புறத்தை பிரதிவாதி வாங்கியுள்ளார் என்றாலும் அந்த விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி வீட்டின் சர்வே எண்.558/2, 4 பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றும், 558/3 நடைபாதை என்றும் சொன்னால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. சர்வே எண்.558/2, 3, 4 சேர்த்து தான் பிரதிவாதிகள் கிரையம் பெற்ற 652–1/2 சதுரடி என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. எனக்கு வழக்கு சொத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், தாவா சொத்தின் அமைப்பு குறித்து எனக்கு எதுவும் தெரியாமல் என் தம்பி கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் குடியிருக்கும் ஆவணிமூலவீதி 19–வது வார்டில் எனக்கும், என் தம்பிக்கும் பூர்வீக வீட்டில் தான் வாக்காளர் அடையாள அட்டை உள்ளது என்றால் சரியல்ல, தெற்குரத வீதியில் வாக்காளர் அடையாள அட்டை உள்ளது. வழக்கு சொத்து முகவரியில் எனக்கும், என் தம்பிக்கும் அடையாள அட்டை எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா வீட்டுக்கும் பக்கத்து வீட்டையும் விலைக்கு வாங்கியுள்ளதால் அவர்களிடம் பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பொய்யாக வழக்கு தாக்கல்

செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. தாவா வீட்டுக்கு வந்து 4, 5 வருடங்கள் ஆவதால் தாவா சொத்தின் அமைப்பு குறித்து எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2023.11.04 15:24:38 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.